**கவனிக்க** - (1) 23.05.2025 ஆந் திகதிய 2438 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.

(2) இவ் வாரம் வெளியாகும் வர்த்தமானியின் பகுதி VI இல் 2025 ஆம் ஆண்டுக்கான கேகாலை மாவட்டத்துக்குரிய நீதாசன வலயங்களுக்கான யூரிமார் பெயர்ப்பட்டியல் ஒன்று தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுகின்றது.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2439 - 2025 මැයි මස 30 වැනි සිකුරාදා - 2025.05.30**

2439 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) – உள்ளூராட்சி


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 550 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் | - |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | |
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி - வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைத் திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2025, யூன் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2025, யூன் மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”

**கே. ஜீ. பிரதீப் புஸ்ப குமார,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

549 - B82686 - 5403 (2025/05)

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## களனிய பிரதேச சபை

### 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 24(1) ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்கின்ற அறிவித்தல்

கம்பஹா மாவட்டம், களனிய பிரதேச சபையில் 2023.01.20 அன்று நடைபெற்ற பொதுச் சபை கூட்டத்திலும், 2024.08.15 அன்று நடைபெற்ற தீர்மானக் குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும், களனிய பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள பின்வரும் வீதி, சபைக்குச் சொந்தமானது என இத்தால் பகிரங்கப்படுத்தப்படுகிறது. இந்த வீதியை சபையிடம் கையளித்து அபிவிருத்தி செய்வதற்கு பிரதேச மக்கள் யாரேனும் ஆட்சேபனை தெரிவித்தால், அதற்கான காரணங்களைக் குறிப்பிட்டு இரண்டு பிரதிகளில் எழுதப்பட்ட ஆவணமொன்றை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் எனக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டுமெனவும், குறித்த காலப்பகுதியில் எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கப்படாவிடின், அதன் பின்னர் அந்த வீதி பிரதேச சபைக்குச் சொந்தமான வீதியாகக் கருதப்பட்டு எதிர்காலத்தில் நிர்வகிக்கப்படும் எனவும் இத்தால் பகிரங்கப்படுத்தப்படுகிறது.

ஈ. எல். சுபசிங்க,
செயலாளர் மற்றும் சபையின் அதிகாரங்கள்,
கடமைகள், அலுவல்களை நிறைவேற்றும்
அலுவலர்.

பிரதேச சபை அலுவலகம்,
களனிய,
2025, மே 15.

**வீதியின் விபரம்**

| | | |
|---|---|---|
| கிராம அலுவலர் பிரிவு | : | 261 வெதமுல்ல |
| வீதியின் பெயர் | : | வராகொட இல. 251 வத்தவீதி |
| வீதியின் ஆரம்பம் | : | வரிப்பணம் இல. 253, எம். ஏ. ஜே. பி. வீரசிங்க அவர்களின் வீடு |
| வீதியின் முடிவு | : | வரிப்பணம் இல. 251/ 5, ஆர். ரவீந்திர டி அல்விஸ் அவர்களின் வீடு |
| வீதியின் நீளம் | : | 144 அடி |
| வீதியின் அகலம் | : | 12 அடி |
| வீதியின் தன்மை | : | கல் பதித்தது |

(இந்த வீதிக்கு ஏற்புடையதாக எம். எச். ஏ. நில்மிணி என்ற நில அளவையாளரால் தயாரிக்கப்பட்ட இல. 4325 கொண்ட அளவைத்திட்டமும் சபையிடம் உள்ளது.)

துண்டு Z

| | | |
|---|---|---|
| வடக்கு | : | திரு. லால் அவர்கள் உட்பட பலருக்குச் சொந்தமான நிலம் |
| கிழக்கு | : | வராகொட வீதி மற்றும் திரு. ஆர். பி. ரஞ்சித் அவர்கள் உட்பட பலருக்குச் சொந்தமான நிலம் |
| தெற்கு | : | திரு. ஆர். பி. ரஞ்சித் அவர்கள் உட்பட பலருக்குச் சொந்தமான நிலம், புனித பாவுல் கல்லூரி விளையாட்டு மைதானம் மற்றும் திரு. அல்விஸ் அவர்களுக்குச் சொந்தமான நிலம் |
| மேற்கு | : | திரு. அல்விஸ் மற்றும் திரு. லால் அவர்கள் உட்பட பலருக்குச் சொந்தமான நிலம். |
| வீதியில் பாலங்கள்/ மதகுகள் | : | இல்லை |
| வீதியில் உள்ள வீடுகளின் எண்ணிக்கை | : | 05. |

05 - 173